**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG30 – நிலை III (Grade III)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜனவரி–பிப்ரவரி 2024**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் <u>ஒரு சொல் / தொடரில்</u> விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10 x 1 = 10)**

1. வேதநாயகம் பிள்ளை எழுதிய முதல் 'நாவல்' எது?
2. 'நீதி நூல் திரட்டு' என்னும் நூலை எழுதியவர் யார்?
3. வெ. இராமலிங்கனார் எங்கு வாழ்ந்தார்?
4. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் யார்?
5. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?
6. முருடு என்பது என்ன?
7. வாவி என்னும் சொல்லின் பொருள் யாது?
8. இயேசு காவியம் எச்சமய நூல்?
9. மணி கானகத்தில் தங்கிய இடம் யாது?
10. விடை எத்தனை வகைப்பெறும்?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் <u>பத்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>மூன்று வரிகளில்</u> விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. நண்பரிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?
2. சிறுபஞ்சமூலம் என்பதன் பெயர்க்காரணம் கூறுக.
3. இளங்கோவடிகள் குறிப்பு வரைக.
4. இரட்டுற மொழிதல் என்றால் என்ன?
5. மழை பெய்வதற்கான அறிகுறிகள் யாவை?
6. பாடாண் திணை என்றால் என்ன?
7. பாரதியார் சுதந்திர தேவியை எவ்வாறு வணங்குகிறார்?
8. பாரதிதாசன் புரட்சிக்கவிஞர் என ஏன் சிறப்பிக்கப்பெற்றார்?
9. சாளை இளந்திரையன் யாரை வழிக்காட்டியாகக் கொண்டார்?

10. ஆகுபெயர் என்றால் என்ன?
11. விகாரப் புணர்ச்சி என்பது யாது?
12. பாரதியாரின் முப்பெரும் படைப்புகள் யாவை?
13. மக்களின் வாழ்நிலையை தீர்மானிப்பது எது?
14. நாட்டுப்புறப்பாடல் வெளிப்படுத்துவது யாது?
15. தேவாரத்தை இயற்றியவர்கள் யாவர்?

## பகுதி – இ

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

***Answer any five questions in six sentences each.*** (5x4=20)

1. நந்திவர்மன் குறித்து எழுதுக.
2. எது தமிழின் மேன்மையாகும்?
3. தேவாரம், திருவாசகம் குறித்து எழுதுக.
4. திருமங்கை ஆழ்வார்–குறிப்பு வரைக.
5. 'வானவர்க்கும் நின்னுடைய தூதருக்கும்' எனத் தொடங்கும் பாடலின் கருத்தைத் தொகுத்து எழுதுக.
6. பாவாணரின் சிறப்புகள் குறித்து எழுதுக.
7. பகுபதம் என்றால் என்ன? அதன் உறுப்புகள் யாவை?
8. பேரருவி மற்றும் ஐந்தருவி குறித்து எழுதுக.

## பகுதி – ஈ

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**

***Answer any one of the following questions in fifteen sentences.*** (1x10=10)

1. நடப்பதெல்லாம் நன்மைக்கே கதையைச் சுருக்கி எழுதுக.
2. ஐவகை தொகைநிலைத் தொடர்களை விளக்குக.
3. குற்றாலத்தின் சிறப்புகள் குறித்து விவரித்து எழுதுக.

## பகுதி – உ

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**

***Write an essay in three pages to any one of the questions.*** (1x15=15)

1. செந்தமிழ்க்காஞ்சியில் தமிழின் சிறப்புகள் குறித்து பாவாணரின் கருத்துகளை விவரித்து எழுதுக.
2. ஆகுபெயர் என்றால் என்ன? ஆகுபெயர் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

.....